சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

வாரப்பாடசாலை

செயலட்டை - 09

Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa

பாடம்:-பொருளியல்

தரம் -13

2021. 07. 05 – 2021. 07. 09

**தேர்ச்சி 11.0:- அபிவிருத்தியின் பன்முகத்தன்மையை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.8 :- இலங்கையின் ஊழியப் படையையும் அது கணிப்பீடு செய்யப்படும் முறையையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.9 :- இலங்கையில் தொழில் செய்வோர், தொழிலற்றோர் தொடர்பாகக் கட்டமைப்பு ரீதியான பண்புகளை விளக்குவார்.**

❖ ஊழியப் படை :- குறிப்பிட்ட யாதாயினும் ஒரு சந்தர்ப்பத்தில் சம்பளத்தை அல்லது வேறேதும் நலன்களை எதிர்பார்த்து பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது தொழில் ஒன்றை தேடிக்கொண்டிருக்கின்ற 15 வயது, 15 வயதுக்கு மேற்பட்ட வயதுடைய மக்கட் பிரிவினர் ஊழியப் படை ஆகும்.

❖ தொழில் வாய்ப்பு :- குறித்த காலப்பகுதியில் சம்பளத்தை அல்லது வேறேதேனும் நலன்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு ஊழியர் பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருத்தல் தொழில்வாய்ப்பு எனப்படும்.

**<u>பயிற்சிகள்.</u>**

1. ஊழியப் படையின் அளவை நிர்ணயிக்கின்ற காரணிகள் யாவை?
2. இலங்கையின் ஊழியப் படையின் பண்புகள் யாவை?
3. ஆண்களோடு ஒப்படுமிடத்து பெண்களிடையே உயர்ந்த மட்ட தொழிலின்மை ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
4. வேலையின்மையை குறைப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை?
5. " மறைமுக வேலையின்மை " என்ற பதத்தினால் கருதப்படுவது யாது?